செ.வெ. எண்: 346 நாள்: 16-05-2008

## பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் சீரோடும் சிறப்போடும் செயல்பட்டு வரும் தமிழக அரசின், ஆதிதிராவிடர் நலத்துறை வேலை வாய்ப்புத் தரும் பல்வேறு பயிற்சிகளை நடத்தி வருகிறது, இந்த ஆண்டு பல புதிய பயிற்சிகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. குறிப்பாக, கடல்சார் பயிற்சியினை, இவ்வாண்டு மேற்கொள்ள முன் வருவோருக்கு, அவர்களுக்குப் பயிற்சி காலத்தில் ஏற்படும் செலவினை அரசு ஏற்க இருக்கிறது.

தேசிய கடல்சார் பயிற்சி நிறுவனத்தால் (National Maritime Academy) நடத்தப்படும் B.Sc. நாட்டிகல் சயின்ஸ் (B.Sc Nautical Science) பட்டப்படிப்பிற்கு இந்திரா காந்தி திறந்தவெளி பல்கலை கழகமும் (IGNOU) கப்பல் துறை தலைவரும் (Director General of Shipping) இணைந்து நுழைவுத் தேர்வு நடத்த உள்ளதாக 24.04.2008 அன்று 'இந்து' நாளிதழில் விளம்பரம் வெளியாகியுள்ளது.

- விண்ணப்பிக்க கடைசி நாள் 27.05.2008
- நுழைவுத் தேர்வு 15.06.08 அன்று ஆன்லைன் (Online) மூலம் நடைபெறும்
- இது சம்பந்தமான விவரங்கள் http//www.ignou.ac.in என்ற வெப்சைட்டில் காணலாம்.
- மேற்கண்ட நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் இந்த பயிற்சியினை பெறத் தகுதி உடையவர் ஆவார்கள். எனவே இந்நுழைவுத் தேர்வில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற்றவர்கள் தாட்கோ மேலாண்மை இயக்குநர் சென்னை–600 101 அவர்களிடம் பதிவு செய்ய வேண்டும்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9